**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**காட்டுமன்னார்கோயில்**

முன்னிலை திரு. M. சாம் யூஜின் ஜெபக்குமார், B.E.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ,

காட்டுமன்னார்கோயில்

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**சுருக்கு விசாரணை வழக்கு எண். 04/2016**

**(CNR NO: TNCD 190001022016**

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட**

**ROC.No.814/2020/RG/F1**

**(P.Dis.No.36/2021** உத்தரவின்படி **CASE SUMMARY**

| | | |
|---|---|---|
| 01. | The Period of remand of the accused | A1 to A5 - AB |
| 02. | The date of filing of the Complaint/Final Report of the Court | 12.01.2016 |
| 03. | The date of committal of the case to the Court Session | Not Applicable |
| 04. | The date of questioning of the accused under sections 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | 26.02.2016 |

| | | |
|---|---|---|
| 05. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions under Section 317 of the Code. | Nil |
| 06. | Date of examination in-chief and cross-examination of a witness. | PW1, PW2 - 12.04.2016<br>PW3, PW4 - 12.07.2016<br>PW5 - 04.08.2016<br>PW6 - 23.08.2021<br>PW7 - 25.05.2026<br>PW8 - 06.07.2026 |
| 07. | Date of examination of the accused under section 313 of the code; | 10.07.2026 |
| 08. | Details of Abscond of an accused and his appearance/production, as the case may be; and | Nil |
| 09. | grant of stay by superior Courts and the results thereof | Nil |

M. Sam Eugine Jebakumar

Digitally signed by M. Sam Eugine Jebakumar
Date: 2026.08.07 19:32:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர் ,காட்டுமன்னார்கோயில்

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**காட்டுமன்னார்கோயில்**

முன்னிலை திரு. M. சாம் யூஜின் ஜெபக்குமார், B.E.,B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ,
காட்டுமன்னார்கோயில்

**2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**சுருக்கு விசாரணை வழக்கு எண். 04/2016**

**(CNR NO: TNCD** 190001022016

அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,
காட்டுமன்னார்கோயில் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்ற எண்.106/2015 ... குற்றமுறையிடுபவர்

// எதிர் //

1. பாண்டியன் (வயது 56/2026)
   த/பெ. அய்யாறு
2. மதி (எ) மதியழகன் (வயது 49/2026)
   த/பெ.அய்யாறு

3. ஜெயா (வயது 49/2026)
   க/பெ. பாண்டியன்
4. சுதா (வயது 43/2026)
   க/பெ. மாயவேல்
5. வள்ளி (வயது 39/2026)
   க/பெ. காமராசு ... எதிரிகள்

இவ்வழக்கானது, 16.07.2026 அன்று விசாரணைக்கு வந்தபொழுது, எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.பாலமுருகன், B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும் அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டும் ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:

**தீர்ப்புரை**

இவ்வழக்கில் 1 முதல் 5 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 506(1)-ன் கீழும் குற்றம் முறையிடப்பட்டுள்ளது.

**1. குற்ற இறுதி அறிக்கை சுருக்கம்**

இவ்வழக்கானது 13.05.2015ந் தேதி மாலை சுமார் 06.00 மணியளவில் இவ்வழக்கின் ப.சா.1 சாந்தி என்பவருக்கும் அதே ஊரைச் சேர்நத அய்யாறு மகன்கள் 1வது எதிரி பாண்டியன், 2வது எதிரி மதி என்பவர்களுக்கும் வாய்தகராறு ஏற்பட்டதால் இரண்டு எதிரிகளும் சேர்ந்து தேவுடியா குச்சிகாரி என்று பேசி அடித்து கீழே தள்ளிவிட்டுள்ளனர் என்றும், அப்போது 3 முதல் 5 எதிரிகளும் சேர்ந்து தேவுடியா குச்சிக்காரி என்று பேசி அடித்து கொலைமிரட்டல் செய்துள்ளதாகவும், இவ்வழக்கின் ப.சா.1க்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என மருத்துவ சான்று கிடைக்கப்பெற்றதால் 1 முதல் 5 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 147, 294(பி), 323, 506(i)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகள் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207 இன் படி வழக்கு ஆவணங்கள் அனைத்தும் எதிரிகளுக்கு 22.02.2016 அன்று இலவசமாக வழங்கப்பட்டு 26.02.2016 அன்று குவிமுச பிரிவுகள் 251 உ/இ 262–ன் படி 1 முதல் 5 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 506(i)–ன் குற்றச்சாட்டுகளின்

சாராம்சத்தை விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து தெரியவரும் சாட்சியத்தின் சுருக்கம்:**

அ.சா.1 இந்த வழக்கில் தகவலாளி மற்றும் பாதிக்கப்பட்ட நபர் என்றும், அ.சா.3 அவரது மகள் என்றும், 2015ம் ஆண்டு 5வது மாதம் அ.சா.3ன் அண்ணனான சிலம்பரசன் என்பவர் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது காமராஜ் என்பவர் வெடியை வீட்டிற்குள் தூக்கி போட்டு விட்டதாகவும், வெடித்ததில் வீடு முழுவதும் புகை மூட்டமாகவும் குப்பையாகவும் ஆனது என்றும், இது பற்றி மேற்படி சிலம்பரசன் என்பவர் காமராஜ் என்பவரை கேட்டபோது மேற்படி காமராஜ் என்பவர் செத்தா போயிட்ட என்று கேட்டு அவர் உடன் இருந்தவர்கள் மேற்படி சிலம்பரசன் என்பவர் காமரைாஜை அடித்து விட்டதாக கூறி ஆட்களை அழைத்து வந்து விட்டதாகவும், திருவிழாவிற்கு வந்தவர்கள் அவர்களை தடுத்து விட்டனர்

என்றும், பயந்து கொண்டு அ.சா.3ன் அண்ணனை வெளியூருக்கு அனுப்பி விட்டனர் என்றும், அதன் பின்பு மறுநாள் ஊர் பஞ்சாயத்தார்கள் வந்து ஊர் பஞ்சாயத்தில் பிரச்சனையை பேசி தீர்த்துக் கொள்ளலாம் என்று சிலம்பரசனை அழைத்து வருமாறு தெரிவித்துள்ளதாகவும், 09.05.2015 அன்று மாலை 4.00 மணிக்கு பாண்டியன், மதி, ஜெயா, சுதா, வள்ளி ஆகியோர் அ.சா.1ஐ கட்டை கழியால் அடித்து முடியை பிடித்து இழுத்து உடலில் வலி ஏற்படுத்தி அ.சா.1ன் மகனை ஏன் ஒப்படைக்கவில்லை என்று சொல்லி தேவடியா, குச்சிகாரி என்ன திட்டி, அ.சா.1ன் மகளையும் அடித்துள்ளனர் என்றும், அ.சா.1 பேச்சு மூச்சு இல்லாமல் ஆம்புலன்ஸ் மூலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த அ.சா.1ஐ சிகிச்சை செய்த போது அவருக்கு, 1. இடது கணுக்காலில் வீக்கம் 5 x 4 செ.மீ., 2. வலது முன் கையில் வீக்கம் 5 x 2 செ.மீ., 3. வலதுபுற நெற்றியில் வீக்கம் 4 x 3 செ.மீ., 4. பின் தலையில் ஒரு வெட்டு காயம் 2 x 0.25 செ.மீ., இடதுபுற நெஞ்சில் வலி ஆகியவை காணப்பட்டுள்ளதாகவும், மேற்கண்டவாறு காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனையில் முதற்கட்ட சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் மேல் சிகிச்சைக்காக அ.சா.1 ராஜா முத்தையா மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி இரண்டு மருத்துவமனைகளில் அளிக்கப்பட்ட சிகிச்சையின் அடிப்படையில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5

ஆகிய காயச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது அ.சா.ஆ.1 புகார் கொடுத்துள்ளதாகவும், மேற்படி புகாரின் மீது அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கை புலன் விசாரணை செய்த அ.சா.8, சம்பவ இடம் சென்று அ.சா.4, அ.சா.5 ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.7 பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளதாகவும், பின்னர் சாட்சிகள் அனைவரையும் விசாரித்து காய சான்றுகள் பெற்று எதிரி மீது இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

**5.** இறுதி அறிக்கையில் சாட்சிகளாக பட்டியலிடப்பட்டவர்களில் ப.சா.2, ப.சா.5 ஆகியோரின் சாட்சியம் அரசு தரப்பால் விலக்கிக் கொள்ளப்பட்டு மற்ற சாட்சிகள் அனைவரும் அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ளனர். மேற்படி சாட்சிகளின் சாட்சியத்தில் எதிரிகளுக்கு பாதகமாக அவர்களை குற்றப்படுத்தும் விதமாக அமைந்திருந்த சாட்சியம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் படி விசாரித்த போது எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தை பொய் சாட்சியம் எனவும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சியம் உண்டு எனவும் தெரிவித்ததால் எதிரிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்ப்பு அளிக்கப்பட்ட நிலையில் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாமல் எதிரிகள் தரப்பில் சாட்சியம் இல்லை என எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் செய்த

மேற்குறிப்பின் அடிப்படையில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 506(i)-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.**

**7.** கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கின் எதிரிகள் அ.சா.1ஐ ஆபாச வார்த்தைகளால் திட்டி தாக்கி சொற்ப காயம் ஏற்படுத்தியுள்ளனர் என்றும், எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளானது அ.சா.1 முதல் அ.சா.8 சாட்சிகளின் வாய்மொழி சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 சான்றாவணங்கள் மூலமும் நிரூபிக்கப்பட்டுள்ளது எனவும், எதிரிகள் செய்த குற்றமானது பெண்ணுக்கு எதிரான குற்றம் என்பதால் அவருக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் எனவும் வாதிட்டார்.

**8.** மாறாக கற்றறித்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர், அரசு தரப்பு

சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளனர் எனவும், அவர்களது சாட்சியம் இந்த எதிரிகளுக்கு எதிரான அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக உள்ளது எனவும், இந்த வழக்கில் புகார் அளிப்பதில் அதிக தாமதம் உள்ளது எனவும், இந்த வழக்கின் தன்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் மேற்படி தாமதமானது அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகம் ஏற்படுத்தும் விதமாக உள்ளது எனவும், அத்தகைய சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**9.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டது. 13.05.2015 அன்று மாலை சுமார் 06.00 மணி அளவில் சாந்தி என்பவருக்கும் இந்த வழக்கின் 1, 2 எதிரிகளுக்கும் வாய் தகராறு ஏற்பட்டதில் எதிரிகள் இருவரும் சேர்ந்து மேற்படி சாந்தி என்பவரை தேவுடியா, குச்சிகாரி என்று பேசி அடித்து கீழே தள்ளிவிட்டுள்ளனர் என்றும் அப்போது 3 முதல் 5 எதிரிகளும் சேர்ந்து மேற்படி சாட்சியை தேவுடியா, குச்சிகாரி என்று பேசி அடித்து கொலை மிரட்டல் விடுத்துள்ளனர் என்பதும் ஆகும். மேற்படி சாந்தி என்பவர் இந்த வழக்கில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரே இந்த வழக்கின் தகவலாளியும் ஆவார். அ.சா.1 அவரது சாட்சியத்தில், 2015ம் ஆண்டு 5ம் மாதத்தில் மாலை 04.00 மணிக்கு எதிரிகள் அனைவரும் அவரை கட்டைகழியால் அடித்து

முடியை பிடித்து இழுத்தனர் என்றும், தனக்கு உடலில் பயங்கர வலி ஏற்பட்டது என்றும், அப்போது ஏன் அவரது மகனை ஒப்படைக்கவில்லை என்று சொல்லி தேவடியா, குச்சிகாரி என்று அசிங்கமாக திட்டி அடித்தனர் என சாட்சியம் அளித்துள்ளார்.

**10.** அ.சா.2 சாட்சியானவர், எதிரிகள் அனைவரும் அ.சா.1 ஐ தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். எனினும் மேற்படி சாட்சி அவரது சாட்சியத்தில் மேற்படி விபரங்களை தான் கேட்டு தெரிந்து கொண்டதாகவே தெரிவித்துள்ளார். எனவே, அ.சா.2 சாட்சியின் மேற்படி சாட்சியம் கேள்விநிலை சாட்சியம் ஆகும். அ.சா.3, அ.சா.1–ன் மகள் ஆவார். அவர் அவரது சாட்சியத்தில், 1, 2 எதிரிகள் கழி மற்றும் இரும்பு பைபால் அ.சா.1 ஐ தாக்கினார்கள் என்றும், மதி என்பவர் கையில் கழியுடன் இருந்ததாகவும், சுதா என்பவர் வீட்டில் இருந்த இரும்பு பைப்பால் அ.சா.1 ஐ தாக்கியதாகவும் வசந்தா என்பவர் வாசற்படியில் இருந்து விளக்கமாற்றை எடுத்து வந்து அ.சா.1 ஐ தாக்கியதாகவும் எதிரிகள் அனைவரும் அ.சா.1 ஐ வீடு புகுந்து தாக்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் மேற்படி சாட்சிகள் யாரையும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

**11.** அ.சா.4, அ.சா.5 ஆகிய சாட்சிகள் பார்வை மகசர் சாட்சிகள்

ஆவார். அவர்கள், அவர்களது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், அவர்கள் வெற்றுத்தாளில் கையொப்பம் செய்ததாக தெரிவித்துள்ளனர். அ.சா.6 அவரது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், அவர் ஊருக்கு சென்று இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 சாட்சியை பிறழ் சாட்சியமாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதித்த போதும் அது அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அமையவில்லை. எனவே, இந்த வழக்கின் காயமுற்ற சாட்சியான அ.சா.1 மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க கூடியதாக உள்ளதா என கவனத்துடன் பரிசீலிக்கும் போது, எதிரிகள் தன்னை கட்டைகழியால் அடித்து முடியை பிடித்து இழுத்து ஆபாசமாக பேசி உள்ளதாக சாட்சியம் அளித்துள்ள அ.சா.1, அவர் அளித்த அ.சா.ஆ.1 புகாரிலும், புகார்தாரரின் விசாரணையிலும் அவ்வாறு தெரிவிக்கவில்லை. மாறாக, அ.சா.1 அவர் அளித்த புகாரிலும் புகார்தாரர் விசாரணையிலும் தெரிவித்திருப்பது, 1, 2 எதிரிகள் அவரை ஆபாசமாக பேசி அடித்து தள்ளிவிட்டனர் என்பதும், மற்ற எதிரிகள் அவரை ஆபாசமாக பேசி அடித்து கொலை மிரட்டல் விடுத்தனர் என்பதுமே ஆகும். எனவே நீதிமன்ற விசாரணையில் குறிப்பிட்டுள்ளது போல் எதிரிகள் அவரை கட்டைக்கழியால் தாக்கியதாக அ.சா.ஆ.1 புகாரில் எதுவும் தெரிவிக்கவில்லை. மேலும், வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 சாட்சியானவர் அவரது சாட்சியத்தில் தெரிவித்துள்ள சங்கதிகள் அனைத்தும் அரசு தரப்பு வழக்கிலிருந்து

மாறுபட்டு வேறு சம்பவமாக தெரிவித்துள்ளார். மேற்படி இரு சாட்சிகளின் சாட்சியம் ஒருவருக்கு ஒருவர் முரண்பட்டு காணப்படுவதோடு அது அரசு தரப்பு வழக்கிற்கும் முரண்பட்டு முன்னேற்றங்களுடன் காணப்படுகிறது.

**12.** இந்நிலையில், இந்த வழக்கில் புகார் அளிப்பதில் காணப்படும் தாமதத்தை கருத்தில் கொள்வது அவசியமாகும். இந்த வழக்கு சம்பவமானது, 09.05.2015 அன்று மாலை 6.00 மணிக்கு நடந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அ.சா.ஆ.1 புகார் மற்றும் அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் படி புகார்தாரருக்கு மேற்படி வழக்கு சம்பவம் பற்றிய தகவலானது மிகவும் தாமதமாக 13.05.2015 அன்றே கொடுக்கப்பட்டுள்ளது. இந்த தாமதத்திற்கு அரசு தரப்பில் எந்த ஒரு காரணமோ விளக்கமோ வழங்கப்படவில்லை. மேலும், அ.சா.1 அவரது சாட்சியத்தில் அவர் மருத்துவமனையில் இருந்த போது அவரிடம் புகார் வாக்குமூலம் பெறப்பட்டது என தெரிவித்துள்ளார். ஆனால், அ.சா.ஆ.1 புகாரானது அ.சா.1 புகார்தாரர் காவல் நிலையம் சென்று கொடுத்த புகார் போல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறெனில், அ.சா.1 அவரது சாட்சியத்தில் தெரிவித்துள்ள மருத்துவமனையில் வைத்து அவரிடம் பெறப்பட்ட முதல் தகவலான புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என அறிய முடிகிறது. மேலும் அந்த முதல் தகவலானது இந்த வழக்குக்கோப்பில்

இணைக்கப்படவும் இல்லை. எனவே, வழக்கு சம்பவத்திற்கு பின்னிட்டு மருத்துவமனையில் வைத்து அ.சா.1 டம் புகார் வாக்கு மூலம் பெற்றுவிட்டு அதன் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யாமல் மிகவும் தாமதத்துடன் அ.சா.ஆ.1 புகார் பெற்று அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பது அரசு தரப்பு வழக்கின் மீது கடும் சந்தேகம் ஏற்படுத்தும் விதமாக உள்ளது. அவ்வாறு தாமதத்துடன் பெறப்பட்ட அ.சா.ஆ.1 புகாரில் தான் தாக்கப்பட்டதில் எந்த இடங்களில் தனக்கு காயம் ஏற்பட்டது என்றோ அந்த காயங்கள் யார் ஏற்படுத்தியது என்றோ குறைந்தபட்ச விபரங்கள் கூட தெரிவிக்கப்படவில்லை. இந்நிலையில், அ.சா.1 க்கு சிகிச்சை அளித்து வழங்கப்பட்ட அ.சா.ஆ.4, அ.சா.ஆ.5 ஆகிய விபத்து பதிவேடுகளை பரிசீலிக்கும் போது, வழக்கு சம்பவத்தின் போது அ.சா.1 தன்னை 20 நபர்கள் தாக்கியதாக தெரிவித்துள்ளார். ஆனால் அ.சா.ஆ.1 புகாரில் 5 நபர்கள் மட்டுமே வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டது போல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த முரண்பாடானது மேற்படி புகார் அளிப்பதில் உள்ள கால தாமதத்தால் எழும் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தும் விதமாக உள்ளது. மேற்படி முரண்பாடுகள் தொடர்பாக இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான அ.சா.8 ஐ குறுக்கு விசாரணையில் வினவிய போது அவரும் மேற்படி முரண்பாடுகளை தெளிவுபடுத்தவில்லை.

**13.** எனவே அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் ஒருவருக்கொருவர்

முரண்பட்டு அரசு தரப்பு வழக்கிற்கு மாறுபட்டு காணப்படுவதால் அவற்றின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக முடிவுக்கு வர இயலாது. எனவே அரசு தரப்பு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளது. அதன்படி, அரசு தரப்பு வழக்கில் காணப்படும் சந்தேகங்களின் பலனை பெற எதிரிகள் தகுதி உடையவர் ஆவார்கள்.

**14. இறுதியாக,**

1 முதல் 5 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 147, 294(பி), 323, 506(i) –ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் 1 முதல் 5 எதிரிகள் மேற்கண்ட குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் அல்ல என குவிமுச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

எதிரிகள் ஏற்கனவே இந்த நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

என்னால் இத்தீர்ப்புரை தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ம் நாள் என்னால் இந்நீதிமன்றம் அவையறிய பகரப்பட்டது.

M. Sam Eugine Jebakumar

Digitally signed by M. Sam Eugine Jebakumar
Date: 2026.08.07 19:32:40 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர், காட்டுமன்னார்கோயில்**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| சாட்சியின் குறியீடு | சாட்சியின் பெயர் | சாட்சியத்தின் தன்மை |
|---|---|---|
| அ.சா. 1 | சாந்தி | புகார்தாரர். |
| அ.சா. 2 | ராமலிங்கம் | கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா. 3 | பாக்யலட்சுமி | சாட்சி-1க்கு அனுசரனையான சாட்சி. |
| அ.சா. 4 | பிரதாப் | பார்வை மகசர் சாட்சி. |
| அ.சா. 5 | அண்ணாதுரை | பார்வை மகசர் சாட்சி. |

| | | |
|---|---|---|
| அ.சா. 6 | வளர்மதி | கண்ணுற்ற சாட்சி. |
| அ.சா. 7 | திரு.மோகன் (மருத்துவர்) | மருத்துவ சாட்சி. |
| அ.சா. 8 | திரு.கதிரவன் (காவல் ஆய்வாளர்) | விசாரணை அதிகாரி. |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| சான்றாவணத்தின் குறியீடு | சான்றாவண விபரம் | சான்றாவணத்தை நிரூபித்தவர் /சான்றளித்தவர் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 13.05.2015 தேதியிட்ட புகார். | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 14.05.2015 தேதியிட்ட பார்வை மகசரில் முதலாவதாக உள்ள அ.சா.4 ன் கையொப்பம். | அ.சா.8 |
| அ.சா.ஆ.3 | 14.05.2015 தேதியிட்ட பார்வை மகசரில் இரண்டாவதாக உள்ள அ.சா.5 ன் கையொப்பம். | அ.சா.8 |
| அ.சா.ஆ.4 | 09.05.2015 தேதியிட்ட அ.சா.1 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய | அ.சா.7 |

| | | |
|---|---|---|
| | காயச்சான்று. | |
| அ.சா.ஆ.5 | 09.05.2015 தேதியிட்ட ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அ.சா.1ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று. | அ.சா.7 |
| அ.சா.ஆ. 6 | 13.05.2015 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. | அ.சா.8 |
| அ.சா.ஆ. 7 | 14.05.2015 தேதியிட்ட பார்வை மகசர். | |
| அ.சா.ஆ. 8 | 14.05.2015 தேதியிட்ட மாதிரி வரைபடம். | அ.சா.8 |

**அரசுதரப்பு சான்று பொருள்:** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சி சான்றாவணம் மற்றும் சான்றுபொருள்:</u>** இல்லை

**<u>குறிப்பு:</u>**

1. வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரிக்கப்படவில்லை.

3. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்து வந்தார்கள்.

M. Sam Eugine Jebakumar

Digitally signed by M. Sam Eugine Jebakumar
Date: 2026.08.07 19:32:56 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், காட்டுமன்னார்கோயில்**